# இல்லந்தோரும் தலைவர் தளபதி!

# இளைஞர்கள் உள்ளந்தோரும், துணை முதல்வர் உதயநிதி!

திராவிட மாடல் ஆட்சி நாயகர், கழகத் தலைவர் மாண்புமிகு தளபதியவர்களின் அறிவுத்திறத்தால், ஆழமான ராஜதந்திரத்தால், கூட்டணிக் கட்சியினரை அரவணைத்து முன்னெடுத்த தேர்தல் யுக்திகளால் தமிழகத்தில் கழகத்தின் ஆட்சி ஆறாவது முறையாக அமைந்து, மூன்றாண்டுகளைக் கடந்து, நாளும் மக்கள் நலன் சார்ந்த நலத்திட்டங்களை தமிழ்நாடும், தமிழக மக்களும் பெற்று, நலிவு நீங்கி, வாழ்வில் பொலிவுடன் திகழும் இந்நாளில் திரும்பிப் பார்த்தால், திகைப்பாக இருக்கிறது.

நம்மிடம் வரியாகப் பெற்ற பெரும்பணத்தில், நரிக்கு நாட்டாமை கிடைத்ததுபோல் சிறுதொகையும், தமிழ்நாட்டிற்கு அசாதாரண சூழலிலும், அல்லலுற்ற இயற்கைப் பேரழிவு நேரத்திலும் உதவிடாத ஒன்றிய அரசின் ஓரவஞ்சணை போக்கு ஒருபுறம் இருந்தாலும், வாக்களித்த, வாக்களிக்கத்தவறிய அனைத்து தரப்பினருக்கும் அன்றாடம் நல திட்டங்களை அறிவித்து அதை செயல்படுத்தியும் வருகிறார் நமது திராவிடப் பேரரசர் தளபதியவர்கள்.

அண்டை மாநிலங்களும், அயல்நாட்டினரும், வியந்து பார்க்கும் நிர்வாகத்திறனில் நிகரற்றுத்திகழும் நமது தலைவர், ஓய்வின்றி, சுற்றிச் சுழன்று, மக்கள் பணியாற்றிவருகிறார்.

ஆட்சிக்கு வந்தது முதல், அறிவித்துச் செயல்படுத்தும் ஒவ்வொரு திட்டங்களும் வாய்மையுரு தமிழினத்தை வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் செல்கிறது.

குடும்பத்தில் உள்ள தலைவர், மனைவி, பிள்ளைகள், முதியோர் என ஒவ்வொருவரையும் சென்றடையும் வகையில், குடும்பத்தலைவருக்கு நோய்தீர்க்கும் கலைஞர் காப்பீட்டு மருத்துவ வசதி, ( இது எல்லோருக்கும் பொதுவான திட்டம் ). குடும்பத்தலைவிக்கு மாதம் 1000 உரிமைத்தொகை, பேருந்தில் கட்டணமில்லா பயணம், நூறு நாள் வேலை திட்டத்தில் தினசரி ரூபாய் 285 ஊதியம். குடும்பத்தில் உள்ள பெண்பிள்ளைகள் கல்லூரி பயின்றால், அவர்களுக்கு புதுமைப்பெண் திட்டத்தின் மூலம் மாதம் ரூபாய் 1000. ஆணாக இருந்தால், தமிழ்புதல்வன் திட்டத்தின் மூலம் மாதம் ரூபாய் 1000. ஆரம்ப கல்வி முதல் பல



**வழக்கறிஞர் வெ.அன்புவாணன்,**
கொள்கை பரப்பு துணைச் செயலாளர்.

சலுகைகள். சின்னஞ்சிறார்களென்றால், பள்ளியில் மதிய உணவிற்கு முன் காலை உணவு. குடும்பத்தில் வயதான முதியவரென்றால், முதியோர் ஓய்வூதியம்.

மருத்துவ வசதிகள், கல்வி பயின்று, மணமுடிக்கும் பெண்களுக்கு திருமண உதவி திட்டம்.

இப்படி ஒரு இல்லத்தில் உள்ள அனைவரும் தவறாமல் நமது முதல்வரின் திட்டத்தால் பயன் பெற்றே வருகின்றனர்.

இன்னும் 10 நாட்களில் 72 வயதை நிறைவு செய்யும் நமது தலைவர், தனது உடல்நலத்தையும் கருத்தில் கொள்ளாமல் தினம், தினம் சலிக்காமல் உழைக்கிறார். ஒரு நாள் சேலமென்றால், மறுநாள் நெல்லை, மறுநாள் திருச்சி என்று மக்கள் பணிசெய்வதில் மனநிறைவு கொள்கிறார்.

அதுமட்டுமின்றி, ஐயா பெரியாரின் சுயமரியாதை கொள்கைகள், அண்ணல் அம்பேத்கர் வலியுறுத்திப் போராடிய வர்க்க பேத ஒழிப்பு, பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் முழங்கிய மாநில சுயாட்சி போன்றவற்றை மனதில் நிறுத்தி, மத்திய பாஜகவிற்கு அனுவளவும் அஞ்சாமல், எதிர்த்து நின்று, உரிமைக்கு உரக்கக் குரல் கொடுக்கும் முதலமைச்சராக திகழ்கிறார்.

தலைவர் தளபதியவர்கள் ஒன்றிய அரசை ஊதாசினம் செய்யாமல், ஆதரிக்கக் கூட வேண்டாம், அனுசரித்துப் போனாலே, அளவற்ற நிதி, ஐந்தாறு மாநில ஆளுநர் பொறுப்பு, அயல்நாட்டு அம்பாசிடர் பதவி பெற்று நமது இயக்கத்தினரை அமரவைத்து, அழகு பார்க்கலாம்.

ஆனால் தலைவர் கலைஞரின் தாரகமந்திரமாம்,

" கொற்றக்குடையா? கொள்கையா? எது வேண்டுமெனில், கொள்கையை விற்றுப் பிழைக்க வேறுநபர் பாரென்போம்! " எனும் வைரவரிகளை தனது வாழ்நாள் இலட்சியமாகக் கொண்டு, கொள்கை உறுதியுடன் திகழ்கிறார். அவர் மட்டுமின்றி, தனது கொள்கை வாரிசாம் நமது இளைஞரணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதல்வர் உதயநிதிஸ்டாலின் அவர்களையும், நாடுகாக்கும், இனத்தை மீட்கும் லட்சியப்பாதையில் பயணிக்க நாட்டிற்கு அடையாளம் காட்டியிருக்கிறார்.

பெரும் சவால்களுக்கும், எதிர்பார்ப்புகளுக்கும், இடையே மக்கள் மன்றத்தில் மகத்தான வெற்றி பெற்று, ஜனநாயக முறையில் அமைச்சர், துணை முதல்வர் பொறுப்பு வரை உயர்ந்த மாண்புமிகு உதயநிதி அவர்கள், தனது அயராத பணிகளின் மூலம் இளைஞர்களின் இதயங்களில் இடம்பெற்று ஒளிர்கிறார்.

தனது அமைச்சகத்தின் கீழுள்ள இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாடு போன்றவற்றின் மூலம் எண்ணற்ற, ஏழை, எளிய இளைஞர்களின் எதிர்கால நல்வாழ்விற்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்து, பேருதவி புரிந்து வருகிறார்.

தமிழ்நாட்டு இளைஞர்களிடையே மிகுந்திருக்கும் அறிவுத்திறனை, விளையாட்டு ஆர்வத்தை வெளிக்கொணர்ந்து, அதிலே ஒரு அகமகிழ்வு கொள்கிறார்.

ஊமைபெண் ஒரு கனவு கண்டாள், அதை உள்ளத்தில் வைத்தே, வாடுகின்றாள். என்றொரு திரைப்படப் பாடல் உண்டு. அதுபோல எல்லோர் மனதிலும் வெளியே சொல்ல முடியாத ஆசைகள் இருக்கும். காலம் போன போக்கில் அதை பலரும் நிறைவேறாத ஆசைப் பட்டியலில் பதிந்து விட்டு கடந்தே செல்கின்றனர்.

அண்மையில் சென்னை மெரினாவின் மென்மை மற்றும் வெண்மை அலைகளில் தங்கள் பாதம் பதித்து, பரவசப்பட பெரும் பொருட்செலவில் மாற்றுத்திறனாளிகளுக்கென்று நடைபாதை அமைத்துத் தந்து, ஒரு மாற்று திறனாளி சகோதரரை தள்ளு வண்டியில் அமைரவைத்து, அதை தானே தள்ளிச் சென்று, அந்தத் தோழரின் உள்ளத்தை கொள்ளை கொண்டார் நமது துணை முதல்வர்.

இது ஏதோ சாதாரணமாக தோன்றாலாம். திட்டத்தை அறிவித்து, அதிகாரிகள் மூலம் செயல்படுத்திவிட்டுப் போகலாம். ஆனால் அந்த மாற்றுத் திரணாளிகளும், கடல் அலைகளை எட்டியமர்ந்து பார்க்காமல், அருகில் சென்று ஆனந்தப்பட வேண்டும். அதைத் தானும் அருகிலிருந்து பார்த்து அகமகிழ்வு கொள்ளவேண்டும் என்று நினைத்த அவரின் மனிதாபிமானம் சாதாரணமாக வந்ததில்லை. இப்படித்தான் இருபதாண்டுகளுக்கு முன்பு ஏழைகளின் தொலைதூரத்தில் இருந்த தொலைக்காட்சிப் பெட்டியை, அதை வண்ணத்தொலைக்காட்சி பெட்டியாய் எல்லோர் இல்லத்திற்கும் கொண்டு சேர்த்தார் நமது உயிரனைய தலைவர் கலைஞர் அவர்கள். அதே சிந்தனை, செயலாக்கம் இன்று நமது துணை முதல்வரிடம் காணும்பொழுது, மனம் ஒருவித பெருமிதம் கொள்கிறது.

தனது நல்லாட்சியின் திட்டங்கள் மூலம் ஒவ்வொரு வீட்டிலும் இடம் பெற்றுள்ள நாட்காட்டிபோல தமிழரின் இல்லங்களில் நிறைந்திருக்கிறார் நமது முதலமைச்சர், திராவிடப் பேரரசர் தளபதியவர்கள்!

இளைய சமுதாயத்தின் எதிர்காலத்தை வடித்தெடுப்பதில், வழிநடத்துவதில் கலங்கரை விளக்கமாய் காட்சி தருகிறார் நமது துணை முதல்வர் உதயநிதிஸ்டாலின் அவர்கள்!

ஆம், தமிழர்களின் இல்லந்தோறும், தலைவர் தளபதி!
இளைஞர்களின் உள்ளந்தோறும், துணை முதல்வர் உதயநிதி!





மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (20.02.2025) சென்னை, தேனாம்பேட்டை, டி.எம்.எஸ். வளாகத்தில், 1127 மருத்துவர்களுக்கு கலந்தாய்வு நடத்தி பணியிடமாறுதல் ஆணையினை வழங்கினார். இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர்.ப.செந்தில்குமார், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.செல்வவிநாயகம், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.சங்குமணி, மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணிகள் இயக்குநர் மரு.ராஜமூர்த்தி, கூடுதல் இயக்குநர் மரு.விஜயலட்சுமி, இணை இயக்குநர் மரு.செந்தில்குமார் மற்றும் மருத்துவர்கள், அரசு உயரலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாடு யூத் தேக்வாண்டோ அசோசியேஷன் செயற்குழுக் கூட்டம்!

# முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் தற்காப்புக் கலைப் போட்டி!

### மாஸ்டர் பெ.சேகர் தலைமையில் தீர்மானம்!

சென்னை, பிப்.21

கழகத் தலைவர் பிறந்தநாளையொட்டி மாபெரும் தற்காப்புக் கலைப் போட்டி கழகத் தொண்டர் அணிச் செயலாளர் மாஸ்டர் பெ. சேகர் தலைமையில் நடந்த தமிழ்நாடு யூத் தேக்வாண்டோ அசோஷியேஷன் செயற்குழுக் கூடட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

'தமிழ்நாடு யூத் தேக்வாண்டோ அசோசியேஷன்' அமைப்பானது 1994-ஆம் ஆண்டு முறையாகப் பதிவு செய்யப்பெற்று, மிகவும் நல்ல முறையில் இயங்கி வருகிறது. இவ்வமைப்பானது ஒலிம்பிக் விளையாட்டிலுள்ள தேக்வாண்டோ தற்காப்புக் கலையைப் பரப்பவும், வளர்க்கவும் உருவாக்கப்பட்டது மட்டுமல்ல, இளந்தலைமுறையினரைப் போதைப் பொருள் பழக்கங்களிலிருந்து அன்னியப்படுத்தி அவர்களின் உடலாற்றலை மேம்படுத்தவும், பாதுகாக்கவும் உருவாக்கப்பட்டதாகும்.

தமிழ்நாடு யூத் தேக்வாண்டோ அசோசியேஷன் செயற்குழுக் கூட்டம் 9.2.2025 அன்று சென்னையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் 2023 -2024 தேர்தலில் தேர்வு செய்யப்பட்டுள்ள நிருவாகிகள், மாஸ்டர் பெ.சேகர், சே.லோகராஜ், எஸ்.ரேவதி, மா.ஆறுமுகம், து.சந்துரு, அ.ஜெயசூர்யா, கு.தேவதாஸ், ஜெகநாதன், தச. எழிலன், மு. சண்முகம், மு. குமரன், ம.கணேஷ், ஜி.வெங்கடாஜலபதி, ஆ.ராசேந்திரன், கே.சி. முருகன் ஆகியோருக்கு வாழ்த்துத் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இலக்கியம், அரசியல், வசனப்புரட்சி வாயிலாகச் சமூகத்தில் பல சீர்த்திருத்தங்களைச் செய்து ஐந்து முறை தமிழ்நாடு முதலமைச்சராக இருந்து ஆக்கபூர்வமாகச் சிந்தித்து, செயலாற்றித் தமிழ்நாட்டை சீரிய முறையில் வடிவமைத்த சிற்பியாகத் திகழ்ந்து மறைந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு நாளில் மாஸ்டர் பெ. சேகர் தொகுத்த 'கலைகளின் இதயம் கலைஞர்' நூல் வெளியீட்டு விழாவும், தி.மு.க. தொண்டரணி சார்பில் 20.10.2024 அன்று சென்னையிலுள்ள முத்தமிழ்ப் பேரவையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு முழு ஒத்துழைப்பு நல்கிய தமிழ்நாடு யூத் தேக்வாண்டோ அசோசியேசன் நிருவாகிகளுக்கு இக்கூட்டத்தில் நன்றி தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தமிழ்நாடு முதலமைச்சர் தி.மு. கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் 72 ஆம் ஆண்டு பிறந்த நாள் விழாவினை தி.மு.கழகத் தொண்டரணி சார்பில் ஒலிம்பிக் விளையாட்டிலுள்ள தேக்வாண்டோ தற்காப்புக் கலைப் போட்டியினை நடத்திடவும், ஏழை, எளியவர்களுக்கு உணவு, உடை வழங்கிடும் நிகழ்வுக்குத் தமிழ்நாடு யூத் தேக்வாண்டோ அசோசியேஷன் நிருவாகிகள் முழு ஒத்துழைப்பு வழங்குவதெனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## நாமக்கல் மேற்கு மாவட்டத்தில்

# பேரறிஞர் அண்ணா சிலைக்கு மாலை அணிவிப்பு

### மாவட்டப் பொறுப்பாளர் கே.எஸ்.மூர்த்தி அறிவிப்பு

நாமக்கல் பிப். 21 -

நாமக்கல் மேற்கு மாவட்டப் பொறுப்பாளர் கே.எஸ். மூர்த்தி விடுத்துள்ள அறிக்கை வருமாறு: -

நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் கே.எஸ்.மூர்த்தி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.



அதில், நாமக்கல் மேற்கு மாவட்டம் திருச்செங்கோடு பழைய பேருந்து நிலையம் அருகே உள்ள பேரறிஞர் அண்ணா சிலைக்கு நாளை 22-02-2025 சனிக்கிழமை காலை 9 மணிக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

இந்நிகழ்ச்சியில் மாநில, மாவட்ட, நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள், கழகத் தொண்டர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் கே.எஸ். மூர்த்தி அறிவித்துள்ளார்

# திருவொற்றியூர் மேற்கு பகுதி தி.மு.க. ஆலோசனை கூட்டம்!

### பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் வை.ம.அருள்தாசன் அறிக்கை!!

சென்னை பிப்:21

திருவொற்றியூர் மேற்கு பகுதி செயலாளர் வை.ம. அருள்தாசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு;

சென்னை வடகிழக்கு மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ வழிகாட்டுதலில் திருவொற்றியூர் மேற்கு பகுதி கழக, வட்டக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் இன்று 2102 25 வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணிக்கு ராமகிருஷ்ண நகர் 3வது பிரதான சாலையில் உள்ள திமுக மேற்கு பகுதி கழக அலுவலகத்தில். அவைத் தலைவர் என். திருசங்கு தலைமையில் நடைபெறுகிறது.

திருவொற்றியூர் மேற்கு பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் வை.ம. அருள்தாசன் முன்னிலையில் நடைபெறும் கூட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட பிரதிநிதிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளிட்ட அனைவரும் இக்கூட்டத்தில் தவறாமல் கலந்து கொள்ளுமாறு தனது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார் திருவொற்றியூர் மேற்கு பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் வை.ம.அருள்தாசன்.

பொருள்: கழகத் தலைவர் திராவிட நாயகர் தமிழ்நாடு முதலமைச்சர் பிறந்தநாள் விழா..

வரும் காலங்களில் நடைபெற இருக்கின்ற தேர்தல் மற்றும் கழக ஆக்கப் பணிகள்..



திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில், மும்மொழிக் கொள்கை மூலமாக ஒன்றிய பா.ஜ.க. அரசு இந்தியை திணித்திடும் முயற்சியை கண்டித்து, விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்களை கழக மருத்துவர் அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன் வழங்கி வியாபாரிகளிடம் பிரச்சாரம் செய்தார். உடன் எஸ்.பன்னீர்செல்வம், ப.கார்த்திவேல்மாறன், பிரியா விஜயரங்கன், ஏ.ஏ.ஆறுமுகம், இரா.கார்த்திகேயன், கு.கணேஷ், மண்டி ஆ.பிரகாஷ் உட்பட பலர் உள்ளனர்.

## குன்றத்தூர் தெற்கு ஒன்றியக் கழக ஊராட்சிகளின்

# கிளை வாரியாக கிளைக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

### ஒன்றிய செயலாளர் படப்பை. ஆ.மனோகரன் அறிக்கை!

காஞ்சிபுரம், பிப்.21

குன்றத்தூர் தெற்கு ஒன்றிய செயலாளர் படப்பை. ஆ.மனோகரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

குன்றத்தூர் தெற்கு ஒன்றிய திமுக சார்பில் ஊராட்சிகளில் உள்ளடக்கிய கிளைக் கழக பொது உறுப்பினர் கூட்டங்கள் கீழே குறிப்பிடப்ப ட்டுள்ள விபரப்படி நடைபெற உள்ளது. காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் தா.மோ. அன்பரசன் அறிவிப்புக்கணங்க குன்றத்தூர் தெற்கு ஒன்றிய திமுக நிர்வாகிகள் அடங்கிய குழுவினர் ஒவ்வொரு ஊராட்சிகளுக்கும் வருகை தந்து பொது உறுப்பினர்கள் கூட்டங்களை கிளைக் கழகங்கள் வாரியாக நடத்திட உள்ளனர்.

நூற்றாண்டு கண்ட இயக்கமாம் திராவிட இயக்கத்தின் வழித்தோன்றலாக தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக "எல்லோரும் எல்லாம்" என்று திராவிட மாடல் ஆட்சி நடத்தி இந்தியாவிலேயே தமிழ்நாட்டை முன்னோடி மாநிலமாக கொண்டு செல்லும் கழகத் தலைவர் திராவிடம் மாடல் முதல்வர் அவர்களின் தலைமையில் கழக மேலும் வலிமை பெறவும், கழக இளைஞரணி செயலாளர் தமிழ்நாடு துணை முதல்வர்,:அவர்களின் துணையோடு கழகத்திற்கு வலுசேர்த்திடவும் திராவிட மாடல் அரசு எதிர்வரும் 2026ல் நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலில் அமோக வெற்றிபெற்று மீண்டும் தொடர்ந்திட இந்த பொது உறுப்பினர்கள் கூட்டங்கள் அடித்தளமிட உள்ளது.

எனவே நமது குன்றத்தூர் தெற்கு ஒன்றிய தி.மு.க.வில் அடங்கிய மாவட்ட, ஒன்றிய அணிகளின் நிர்வாகிகள், கிளைக் கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் அனைவரும் தனிக்கவனம் செலுத்தி இ ந் நி க ழ் ச் சி க் க ா க முன்கூட்டியே துண்டுபிரச்ரும் அடித்து கிளைக் கழக உறுப்பினர்கள், இளைஞர் அணி மாணவர் அணி மகளிர் அணி நிர்வாகிகள் பாக நிலை முகவர் மற்றும் பாக நிலை குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட கழகத்தினருக்கு தகவல் தெரிவித்து எழுச்சியோடு நடைபெற்றிட ஏதுவாக செயல்பட வேண்டுமாய் கேட்டுக்கொள்கின்றேன்.

22.02.2025,23.02.2025, மற்றும் 02.03.2025, ஆகிய தேதிகளில்,படப்பை. ஆ. மனோகரன், பொன்.ரமேஷ்கவி, மகாலட்சுமி எட்டியப்பன், மா.சே. பிரகாஷ். ஆகியோர் முன்னிலையில், வரதராஜபுரம் ஊராட்சி, ஆதனூர் ஊராட்சி, நந்தம்பாக்கம் ஊராட்சியிலும், மு. சுப்பிரமணி, இரா. குமரவேல், சே. பார்த்திபன், லட்சுமி ஞானசேகர், ஆகியோர் முன்னிலையில் நடுவீரப்பட்டு ஊராட்சி, பூந்தண்டலம் ஊராட்சி, சிறுகளத்தூர் ஊராட்சியிலும், வ. நந்தகோபால், ரா.தீபக், என்.எஸ். இளங்கோ, கு.ஏழுமலை ஆகியோர் முன்னிலையில், மலையம்பாக்கம் ஊராட்சி,மாடம்பாக்கம் ஊராட்சி, வட்டம்பாக்கம் ஊராட்சியிலும்,

ஏ.மணி, அ.ஜமீர்,இ. பாலாஜி,மல்லிகா நடராஜன், ஆகியோர் முன்னிலையில் பழந்தண்டலம் ஊராட்சி, எருமையூர் ஊராட்சி, திருமுடிவாக்கம் ஊராட்சி, படப்பை ஊராட்சி, எழுச்சூர் ஊராட்சியிலும், வாசுகிமகேஷ், பொன். இளையபாரதி, சங்கீதாவேலு, ரஞ்சித்குமார் ஆகியோர் முன்னிலையில் மணிமங்கலம் ஊராட்சி, சேத்துப்பட்டு ஊராட்சி, மலைப்பட்டு ஊராட்சி, சாலமங்கலம் ஊராட்சியிலும், சி. பார்த்தசாரதி, க.பா. ஆடலரசு,எஸ். கர்ணன், சோபாரகுநாதன் ஆகியோர் முன்னிலையில் வைப்பூர் ஊராட்சி செரப்பணஞ்சேரி ஊராட்சியிலும்,

வி.அரி, ப.அறிவொளி, மலர்விழி தமிழ் அமுதன் ச. பாலகிருஷ்ணன் முன்னிலையில், கரசங்கால் ஊராட்சி சோமங்கலம் ஊராட்சி, அமரம்பேடு ஊராட்சியிலும், மா. பரிமேலழகன், ப.வேல்முருகன், இரா.சந்திரசேகர், மா.ரேவதி முன்னிலையில், சிக்கராயபுரம் ஊராட்சி, கொழுமணிவாக்கம் ஊராட்சி, கொல்லச்சேரி ஊராட்சி, நாட்டரசன்பட்டு ஊராட்சியிலும்,

மு. ராஜேந்திரன், லோ. சுதாகர், தினேஷ் கந்தசாமி, ஜி.ஏ ராயப்பா, ஆர். சையத்ரமிஸ் முன்னிலையில் ஒரத்தூர் ஊராட்சி, காவனூர் ஊராட்சி, வடக்குப்பட்டு ஊராட்சி, சென்னக்குப்பம் ஊராட்சி, வலையகரனை ஊராட்சியிலும் கிளைக் கழக பொது உறுப்பினர் நடைபெறும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



புதுச்சேரி மாநில தி.மு.கழக அவசர செயற்குழுக் கூட்டம் லப்போர்த் வீதியில் உள்ள தலைமைக் கழக அலுவலகத்தில் நடந்தது. கூட்டத்திற்கு அவைத்தலைவர் எஸ்.பி.சிவக்குமார் தலைமை தாங்கினார். துணை அமைப்பாளர் வி.அனிபால் கென்னடி எம்.எல்.ஏ., பொருளாளர் இரா.செந்தில்குமார் எம்.எல்.ஏ., மாநில துணை அமைப்பாளர்கள் ஏ.கே.குமார், அ.தைரியநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாநில கழக அமைப்பாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சிவா அனைவரையும் வரவேற்று, ஆலோசனைகள் வழங்கினார். கூட்டத்தில், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நந்தா சரவணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சண். குமரவேல், கே.எம்.பி. லோகையன், டி. அருட்செல்வி உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.